## பொதுத் தேர்வு - மார்ச் - 2019

# மாதிரி வினாத்தாள்

## 12 - ஆம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

நேரம் : 2.30 மணி    மதிப்பெண் : 90

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.    20 × 1 = 20

1. நிலை முதல் முறையில், கூட்டாளிகளின் இலாப, நட்டங்கள் அவர்களின் -------- கணக்குகளுக்கு மாற்றப்படுகிறது.
   அ) நடப்பு    ஆ) எடுப்பு    இ) முதல்

http://kalviamuthu.blogspot.com

2. நிலை அறிக்கை முறையை, நிகரமதிப்பு முறை எனவும் --------- முறை எனவும் அழைக்கப்படும்
   அ) மாற்றுதல் முறை    ஆ) முதல் ஒப்பீட்டு    இ) இருப்பு நிலைக்குறிப்பு

3. நிறுமமானது பங்குகளை -------
   அ) முகமதிப்பில் மட்டும் வெளியிடலாம்
   ஆ) முகமதிப்பு மற்றும் முனைமத்தில் வெளியிடலாம்
   இ) முகமதிப்பு, முனைமம் மற்றும் தள்ளுபடியில் வெளியிடலாம்

4. ஒவ்வொரு மாத இறுதியிலும் ஒரு குறிப்பிட்ட தொகை எடுக்கும்போது, எடுப்பு மீதான வட்டிக்கு உரிய காலம் -------------
   அ) 11 / 24    ஆ) 12 / 24    இ) 13 / 24

5. 01.04.2016 அன்று பற்பல கடனாளிகள் ₹. 19,500. 31.03.02017 அன்று பற்பல கடனாளிகள் ₹. 9,400. அவ்வாண்டு கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹. 16,500 எனில்,அவ்வாண்டில் கடன் விற்பனை --------
   அ) ₹. 6,400    ஆ) ₹. 12,400    இ) ₹. 26,600

6. 31-03-2010 அன்று இருப்பாய்வின்படி வங்கிக் கடன் 10%. (01-04-2009) ₹.4,00,000 வட்டி கொடுத்தது ₹. 14,000, கொடுபட வேண்டிய வங்கிக் கடன் மீதான வட்டி:
   அ) ₹. 46,000    ஆ) ₹. 36,000    இ) ₹. 26,000

7. ஒரு தொழில் உரிமையாளரின் மொத்த சொத்துகள் ₹. 25,000. அவருடைய பொறுப்புகள் ₹. 3,250. அவருடைய முதல் --------------- ஆகும்.
   அ) ₹. 21,250    ஆ) ₹. 21,750    இ) ₹. 17,500

8. முழுமை பெறாத பதிவேடுகளைப் பயன்படுத்தும் நிறுவனம் ------------
   அ) சிறு வியாபாரிகள்    ஆ) நிறுமங்கள்    இ) அரசு

9. குறைந்த செல் இருப்பு முறையில் தேய்மானம் -----------
   அ) ஆண்டுதோறும் குறையும்    ஆ) ஆண்டுதோறும் அதிகரிக்கும்
   இ) ஆண்டு தோறும் நிலையாக இருக்கும்.

10. ஒறுப்பிழப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ₹. 2,400, ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்த வகையில் தள்ளுபடி ₹. 300 எனில், முதலினக் காப்பு ₹. ---------- ஆகும்.
    அ) ₹. 2,400    ஆ) ₹. 2,700    இ) ₹. 2,100



11. விற்பனை விலை சொத்தின் ஏட்டு மதிப்பை விட அதிகமாக இருந்தால் அது ஒரு --------- ஆகும்.
    அ) நட்டம்    ஆ) வருமானம்    இ ) இலாபம்

12. கடனாளிகள் ₹. 75,000 , வாராஜயக் கடன் ஒதுக்கு ₹. 12,000 எனில், இருப்பிநிலைக் குறிப்பில் காட்டப்பட வேண்டிய தொகை -----------
    அ) ₹. 87,000    ஆ) ₹. 12,000    இ) ₹. 63,000

13. ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களின் தொடக்க ரொக்க இருப்புகள் முறையே ₹. 95,000 ₹. 25,000 மற்றும் ₹. 20,000 எனில், மே மாதத்தின் இறுதி இருப்பு யாது?
    அ) ₹. 95,000    ஆ) ₹. 25,000    இ) ₹. 20,000

14. பொருத்துக
    1. விகித ஆய்வு -- a. திரும்ப செலுத்தும் திறன் ( ஒரு வருடத்திற்குள் )
    2. நீர்மைத் தன்மை விகிதங்கள் -- b. பங்குதாரர் நிதிக்கும் மொத்த புலனாகும் சொத்திற்கும் உள்ள உறவு
    3. உரிமையாளர் விகிதம் -- c. நிறுமத்தின் ஒருமித்த திறன்
    4. நிகர இலாப விகிதம் -- d. நிறுவனத்தின் பலம் மற்றும் பலவீனம்

|  | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | b | a | c | d |
| ஆ. | d | a | b | c |
| இ. | c | d | a | b |
| ஈ. | a | c | d | b |

15. தவறான ஒன்று எது?
    அ) ரொக்கத் திட்டப்பட்டியல்கள் தயாரிக்க மூன்று விதமான முறைகள் உள்ளன.
    ஆ) ரொக்கத் திட்டப்பட்டியல் வணிக அமைப்பின் ரொக்க இருப்பில் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துகின்றன.
    இ) வணிகத்தில் நேரடியாக ஏற்படக் கூடிய ரொக்க நடவடிக்கைகளை மட்டும் கருத்தில் கொண்டு ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்கப்படும்
    ஈ) போதுமான ரொக்க இருப்பை பேண ரொக்கத் திட்டப்பட்டியல் உதவுகிறது.

16. வேறுபட்ட ஒன்று எது?
    அ) முன் செலுத்திய செலவினங்கள்    ஆ) பற்பல கடனாளிகள்
    இ) வங்கி மேல்வரைப்பற்று    ஈ) குறுங்கால முதலீடுகள்

17. மிகச் சரியான ஒன்றை தேர்ந்தெடுக்கவும்.
    அ) கூட்டாண்மை உடன்பாடு என்பது, எத்தொழிலிலும் கிடைக்கும் இலாப நட்டத்தை பகிர்ந்து கொள்வது.
    ஆ) முதல் தொகை, கூடுதல் முதல் இடும்பொழுதோ அல்லது முதல் குறைப்பு செய்யும் பொழுதோ மாறலாம்
    இ) இலாப நட்டப் பகிர்வு கணக்கில், நிகர இலாபம் மற்றும் எடுப்புகள் மீதான வட்டி ஆகியவற்றை பற்று வைக்க வேண்டும்
    ஈ) எடுப்புகள் மீதான வட்டியை மூன்று முறைகளில் கணக்கிடலாம்

18. எவை சரியாக பொருந்தவில்லை?
    அ) பொது காப்பு --- நிகழ்வடையா காப்பு
    ஆ) நற்பெயர் --- பழைய கூட்டாளிகளின் கடந்தகால முயற்சிகளின் பலன்
    இ) ஆதாய விகிதம் --- கூட்டாளி சேர்க்கும்போது கணக்கிடப்படுவது
    ஈ) புற மூலங்கள் --- கடனீட்டுப் பத்திரம் வெளியீடு

19. X , Y என்ற கூட்டாளிகள் 3: 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். Y விலகும் பட்சத்தில், நற்பெயரின் மதிப்பை ₹. 30,000 ஆக தோற்றுவிக்கும் பொழுது X, Y ஆகியோரின் முதல் கணக்கிற்கு மாற்றப்படும் தொகை ₹. ---------

(அ) ₹. 18,000 , ₹.12,000 (ஆ) ₹.20,000 , ₹. 10,000 (இ) ₹. 15,000 , ₹.15,000

20. கூற்று (A) : வியாபார நிறுவனம் முதலினை உரிமையாளரிடம் இருந்து கடனாக பெற்றதாகக் கொள்ளப்படுவதால் முதல் மீது வட்டி அனுமதிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

காரணம் (R) : வியாபாரம் உண்மையிலேயே இலாபத்தில் இயங்குகிறதா என்பதைக் கண்டறிவதற்காக முதல் மீது வட்டி ஒரு குறிப்பிட்ட சதவீதத்தில் கணக்கிடப்பட்டு செலவாகப் பதியப்படுகிறது.

அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.

http://kalviamuthu.blogspot.com

ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்

இ) A சரி ஆனால் R தவறு

ஈ) A தவறு ஆனால் R சரி

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 2 = 14$

21. ஒற்றைப் பதிவு முறைக்கு வரைவிலக்கணம் தருக.
22. விகிதம் வரைவிலக்கணம் தருக.
23. ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்கப் பயன்படுத்தும் முறைகளை வரிசைப்படுத்துக.
24. உயர் இலாபம் என்றால் என்ன?
25. நிறுவனத்தின் நற்பெயர் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தின் இரண்டு ஆண்டு கொள்முதல் என மதிப்பிடப்படுகிறது.

மூன்று ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹. 9,000 ; ₹. 4,000 ; ₹. 2,000. நற்பெயரின் மதிப்பைக் காண்க

26. ₹. 50,000 மதிப்புள்ள இயந்திரத்தின் மீது ஆண்டுக்கு 10 % குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால், மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இயந்திரத்தின் ஏட்டு மதிப்பு யாது?
27. 31.03.2010 அன்றைய இருப்பாய்வின்படி முதல் ₹. 40,000. முதல் மீது வட்டி 6 % அனுமதிக்கப்பட்டது.சரிக்கட்டுப்பதிவு மற்றும் மாற்றுப் பதிவு தருக.
28. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடுக.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| எடுப்பு | 50,000 | தொடக்க முதல் | 1,00,000 |
| கூடுதல் முதல் | 10,000 | இறுதி முதல் | 25,000 |

29. சதீஷ், கிஷோர் என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர்.அவர்கள் கண்ணன் என்பவரை 1/5 கூட்டுக்கு இருவரும் சமமாக தியாகம் செய்து சேர்த்தனர். அவர்களது புதிய இலாப பகிர்வு விகிதத்தை காண்க.



30. அட்டவணை A யை பின்பற்றும் போது,
    i) அழைப்பு முன்பணம் பெற்ற நாளிலிருந்து தவணை நாள் வரும் வரை செலுத்த வேண்டிய வட்டி விகிதம் எவ்வளவு?
    ii) அழைப்புத் தொகை பெற வேண்டிய நிலை ஏற்படும் போது, அழைப்பு முன்பணத்தை எதனுடன்டன் சரி செய்ய வேண்டும்?

## பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 3 = 21$

31. விலகலின் பொழுது செய்யப்படும் சரிக்கட்டுதல்களில் ஏதேனும் மூன்றினை எழுதுக.
32. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல்முறைக்கும் உள்ள வேறுபாடுகளில் மூன்றினை எழுதுக.
33. ரொக்கப் பெறுதல்களுக்கு மூன்று உதாரணம் தருக.
34. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்களில் மூன்றினை எழுதுக.
35. ஒரு நிறுவனத்தின் ஆண்டுதோறும் எதிர்பார்க்கும் சராசரி இலாபம் ₹. 30,000. தொழிலில் பயன்படுத்தப்பட்டுள்ள சராசரி முதல் ₹. 1,00,000. தொழிலில் போட்டுள்ள முதல் மீது எதிர்பார்க்கும் வட்டி 10 % உயர் இலாபத்தின் இரண்டு ஆண்டு கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக.
36. ஒரு நிறுமம் ₹. 1,10,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுவதற்கான செலவு ₹.40,000. அதன் பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள். இறுதி மதிப்பு ₹. 15,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.
37. கீழ்காணும் விவரங்களில் இருந்து ஜனவரி 2018 மாதத்திற்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்க.

    அ) கையிருப்பு ரொக்கம் ₹.250.

    ஆ) ஜனவரி 2018 -- ல் ரொக்க விற்பனை ₹. 6,500.

    இ) ஜனவரி மாதத்திற்கான கூலி ரூ.2,375.

    ஈ) ரொக்கக் கொள்முதல் ₹. 2,745.

38. பின்வரும் விவரங்களைக் கொண்டு நிலைச் சொத்துகள் விற்பனை விகிதத்தைக் கணக்கிடுக.

    நிலைச் சொத்துகள் ₹. 1,00,000 ; தேய்மானம் ₹. 25,000 ; விற்பனை ₹. 3,00,000

39. கமல் வரையறு நிறுமம் ₹. 10 மதிப்புடைய 2,00,000 பங்குகளை 10 % முனைமத்தில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

40. ஒற்றைப் பதிவு முறைக்கும், இரட்டைப் பதிவு முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? ( ஏதேனும் மூன்று )

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $7 \times 5 = 35$

41. திரு.மணி அவர்களது 31 - 03 - 2018 அன்றைய இருப்பாய்வு கீழ்கண்ட விவரங்களைத் தருகிறது.

| | |
|---|---|
| பற்பல கடனாளிகள் | ₹. 40,000. |
| வாராக்கடன் | ₹. 700. |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு | ₹. 1,200. |

**சரிக்கட்டுதல்கள் :**

i) ₹. 1,000 வாராக் கடன் போக்கு எழுதுக.

ii) பற்பல கடனாளிகள் மீது 5 % வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப் பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

( அல்லது )

திரு. ராமு அவர்கள் ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்கேடுகளை வைத்திருக்கிறார். 31.03.2017 அன்றும் 31.03.2018 அன்றும் அவரது சொத்துக்களும், பொறுப்புகளும் கீழ்கண்டவாறு இருந்தன.

| விவரம் | 31.03.2017 ₹ | 31.03.2018 ₹ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 35,000 | 50,000 |
| ரொக்க இருப்பு | 5,000 | 60,000 |
| பற்பல கடனீந்தோர் | 15,000 | 30,000 |
| பற்பல கடனாளிகள் | 75,000 | 1,00,000 |
| அறைகலன் | 15,000 | 15,000 |

http://kalviamuthu.blogspot.com

அவர் அந்த ஆண்டில் ₹. 15,000 கூடுதல் முதல் இட்டார். 2017 - 2018 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் நட்டம் கண்டறிக.

42. திரு. அமர் அவர்களின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட 2017 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| பற்று இருப்புகள் | ₹. | வரவு இருப்புகள் | ₹. |
|---|---|---|---|
| கொள்முதல் | 80,000 | முதல் | 75,000 |
| அறைகலன் | 25,000 | பற்பலக் கடனீந்தோர் | 10,000 |
| சம்பளம் | 22,000 | விற்பனை | 39,000 |
| கை ரொக்கம் | 3,000 | வங்கிக் கடன் | 20,000 |
| கூலி | 1,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 45,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 50,000 | பெற்ற கழிவு | 2,000 |
| பற்பல கடனாளிகள் | 33,000 | பங்காதாயம் | 23,000 |
| | 2,14,000 | | 2,14,000 |

**சரிக்கட்டுதல்கள் :**

i) இறுதி சரக்கிருப்பின் மதிப்பு ₹. 1,00,000

ii) கொடுபட வேண்டிய கூலி ₹. 500.

2017 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்கை தயார் செய்க.

( அல்லது)



தேவையான கணக்குகள் தயார் செய்து மொத்த கொள்முதல் மற்றும் மொத்த விற்பனை காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க பற்பல கடனாளிகள் | 1,00,000 | பற்பல கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 5,90,000 |
| தொடக்க பற்பல கடனீந்தோர் | 65,000 | பெற்ற தள்ளுபடி | 3,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 40,000 | அளித்த தள்ளுபடி | 5,000 |
| வெளித்திருப்பம் | 10,000 | உள்திருப்பம் | 6,000 |
| இறுதி பற்பல கடனாளிகள் | 70,000 | இறுதி பற்பல கடனீந்தோர் | 50,000 |
| ரொக்க விற்பனை | 50,000 | ரொக்கக் கொள்முதல் | 25,000 |

43. பின்வரும் விவரங்களைக் கொண்டு i). மொத்த இலாப விகிதம் ii). நிகர இலாப விகிதம் iii). நடப்பு விகிதம் ஆகியவற்றைக் கணக்கிடுக.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| விற்பனை | 3,00,000 | விற்ற பொருளின் அடக்கவிலை | 1,80,000 |
| நிகர இலாபம் | 30,000 | ரொக்கம் | 20,000 |
| கடனீந்தோர் | 18,000 | வங்கி ரொக்கம் | 30,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | 12,000 | சரக்கிருப்பு | 10,000 |

( அல்லது)

கோபி வரையறு நிறுமம் 01 - 04 -2018 அன்று ₹. 2,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. அதனை நிறுவதற்காக ₹. 40,000 செலவு செய்தது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பிறகு அவ்வியந்திரம் ₹. 1,50,000 க்கு விற்கப்பட்டது. ஆண்டுதோறும் 10 % நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. ஆண்டு தோறும் கணக்குகள் மார்ச் 31 ல் முடிக்கப்படுகின்றன. இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்குகளை முதல் மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

44. கீழ்காணும் விவரங்களிலிருந்து மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான ரொக்க திட்டப் பட்டியல் தயாரிக்க.

| மாதம் | கடன் விற்பனை ₹. | கடன் கொள்முதல் ₹. | செலவுகள் ₹. |
|---|---|---|---|
| ஜனவரி | 2,50,000 | 2,00,000 | 50,000 |
| பிப்ரவரி | 3,00,000 | 3,50,000 | 60,000 |
| மார்ச் | 4,50,000 | 3,00,000 | 70,000 |
| ஏப்ரல் | 2,00,00 | 4,00,000 | 80,000 |

i) தொடக்க ரொக்க இருப்பு ₹. 75,000

ii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்

iii) வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம்

iv) செலவுகள் அந்தந்த மாதத்தில் செலுத்தப்பட வேண்டும்.

v) ஏப்ரல் மாதத்தில் பெறவேண்டிய பங்காதாயம் ₹. 10,000.

( அல்லது )

பின்வரும் விவரங்களில் இருந்து 2017 மே மற்றும் ஜூன் மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்க.

| விவரம் | ஏப்ரல் ₹. | மே ₹. | ஜூன் ₹. |
|---|---|---|---|
| ரொக்கக் கொள்முதல் | 50,000 | 1,00,000 | 1,50,000 |
| ரொக்க விற்பனை | 1,37,500 | 1,62,500 | 2,37,500 |
| கடன் கொள்முதல் | 72,500 | 1,22,500 | 1,62,500 |
| கடன் விற்பனை | 1,37,500 | 1,72,500 | 2,00,000 |
| செலவுகள் | 25,000 | 30,000 | 35,000 |

1. மே 1- ல் மதிப்பிடப்பட்ட தொடக்க ரொக்க இருப்பு ₹. 40,000.
2. சரக்களித்தோர் அனுமதித்த மற்றும் வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம்.
3. செலவுகள் அம்மாதத்திலேயே செலுத்தப்பட வேண்டும்.
4. மே மாதத்தில் பெற வேண்டிய பங்காதாயம் ₹. 8,000.
5. ஜூன் மாதத்தில் செலுத்தப்பட வேண்டிய கழிவு ₹. 1,35,000.

http://kalviamuthu.blogspot.com

45. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு ரவி, ராஜா எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும், நடப்புக் கணக்குகளையும் தயார் செய்க.

| விவரங்கள் | ரவி ₹ | ராஜா ₹ |
|---|---|---|
| 1-04-2003 அன்றைய முதல் | 80,000 | 50,000 |
| 2003 - ஆம் ஆண்டின் எடுப்புகள் | 6,000 | 4,000 |
| முதல் மீது வட்டி 6 % | ? | ? |
| எடுப்பு மீது வட்டி6 % | ? | ? |
| ராஜாவின் கடன் மீது வட்டி | ----- | 3,000 |
| 2003 - ஆம் ஆண்டின் இலாபப் பங்கு | 8,000 | 6,000 |
| கழிவு | 1,600 | 1,200 |
| கூட்டாளியின் ஊதியம் | —— | 2,000 |

( அல்லது )

கோபு, பாபு என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.

31-03-2018 ஆ நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 60,000 | ரொக்கம் | 5,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 20,000 | பற்பல கடனாளிகள் | 70,000 |
| | | சரக்கிருப்பு | 30,000 |
| முதல் கணக்குகள் | | இயந்திரம் | 25,000 |
| கோபு 80,000 | | கட்டடம் | 1,00,000 |
| பாபு 40,000 | 1,20,000 | இலாப நட்ட க/ கு | 10,000 |
| பொதுக்காப்பு | 40,000 | | |
| | 2,40,000 | | 2,40,000 |



01-04-2018 அன்று ரவி என்பவரை 1/5 பங்குக்கு பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) ரவி ₹. 40,000 முதல் கொண்டுவருவது.
ii) ஏடுகளில் நற்பெயர் ₹. 40,000 என தோற்றுவிப்பது.
iii) கட்டடத்தை 1,20,000 என மறுமதிப்பீடு செய்வது.
iv) சரக்கிருப்பை ₹. 21,500 குறைப்பது
v) வாரா ஐயக்கடன் ஒதுக்கு 5%

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் முதல் கணக்கு தயாரிக்கவும்.

46. மாலா வரையறு நிறுமம் பங்கு ஒன்று ₹. 100 வீதம் 20,000 சாதாரண பங்குகளை ₹. 10 முனைமத்தில் பெற விண்ணப்பங்களை வரவேற்றத்து. தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணபத்தின் போது | ₹. 30 |
| ஒதுக்கீட்டின் போது | ₹. 40 ( ₹. 10 முனைமத்துடன் ) |
| முதலாவது அழைப்பின் போது | ₹. 20 |
| இறுதி அழைப்பின் போது | ₹. 20 |

18,000 பங்குகள் ஒப்பப்பட்டது.அனைத்துத் தொகைகளும் பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

( அல்லது )

யமுனா லிமிடெட் ஒன்று ₹.10 மதிப்புடைய 2000 பங்குகளை இறுதி அழைப்புத் தொகை ₹. 3 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. இதில் 1800 பங்குகளை பங்கொன்று ₹. 6 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளும் , பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு மற்றும் முதலினக் காப்பு கணக்குகளைத் தயார் செய்க

47. தமிழ்ச்செல்வி, கலைச்செல்வி, தேன்மொழி என்ற கூட்டாளிகள் முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்வது வந்தனர். கலைச்செல்வி விலக முடிவெடுத்தார். நிறுவனத்தின் நற்பெயர் ₹. 40,000 என மதிப்பிடப்பட்டது.

கீழ்காண்பனவற்றிற்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

அ) நற்பெயர் நிறுவன ஏடுகளில் இல்லாமலிருந்தால்

ஆ) ஏடுகளில் நற்பெயரின் மதிப்பு ₹. 30,000 ஆக இருந்தால்

இ) ஏடுகளில் நற்பெயரின் மதிப்பு ₹. 50,000 ஆக இருந்தால்

( அல்லது )

X , Y என்ற இரு கூட்டாளிகளின் சமமாக இலாப நட்டத்தைப் பகிர்ந்துகொண்டு தொழில் புரிகின்றனர். X என்பவருக்கு மாத ஊதியமாக ₹.5,000 வழங்கவும்,Y என்பவருக்கு கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவு வழங்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஊதியம் மற்றும் கழிவுக்கு முன் நிகர இலாபம் ₹.1,48,000. இலாப நட்டப் பகிர்வுக் கணக்கைத் தயாரிக்கவும்.